# நடப்பு நிகழ்வுகள் ஜனவரி 11 2018

- டெல்லி – சண்டிகர் தேசிய நெடுஞ்சாலையில் 08.1.18 அதிகாலையில் பனி மூட்டம் காரணமாக பளு தூக்கும் வீரர்கள் சென்ற வாகனம் சாலை தடுப்பில் மோதி விபத்துக்குள்ளானது. இதில் சாஷம்யாதம் என்ற வீரர் காலமானார்
- “ Make in India” திட்டத்தின் கீழ், கோயம்புத்தூர் “Coimbatore District Small Industries Association ” ன் சிறுகுறு தொழில் முனைவோர் மூலம் ராணுவ தளவாடங்களுக்கு உதிரிபாகங்கள் உற்பத்தி மற்றும் ஆய்வுக்காக 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படுவதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்
- 75 வது கோல்டன் குளோப் விருதுகள் விழா அமெரிக்காவின் காலிபோர்னியா மாகாணத்தில் உள்ள “The Beverly Hills” உணவகத்தில் வழங்கப்பட்டது. நடிகர் ஸ்டெர்லிங் கே பிரவுன் NBC யின் புகழ்பெற்ற “This is US” எனும் தொடருக்காக விருதைப் பெற்றார்.
- முப்தி முகமது சயீத் நினைவு விருது 2018 பெறும் முதல் நபர் என்ற பெருமையை பீகார் முதல்வர் நிதிஸ் குமார் பெற்றுள்ளார்.
- National Institute of Advance Studies – (NIAS) ன் தலைமையம் பெங்களுருவில் உள்ளது
- 2018 ன் பிரிஸ்பேன் சர்வதேச டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் எலினா ஸ்விடோலினா சாம்பியன் ஆனார் இவர் உக்ரைனைச் சாந்தவர் ஆவார்
- நிகழாண்டிற்கான 30 வது ஹாப்மேன் கோப்பை டென்னிஸ் தொடரை சுவிட்சர்லாந்து அணி 2-1 என்ற கணக்கில் ஜெர்மனை வீழ்த்தி 3 வது முறையாக பட்டம் வென்றது
- மட்டஞ்சேர் கப்பல் துறையின் கப்பல் நிறுத்தம் தளத்தில், கடற்படை கப்பல்களை நிறுத்துவதற்காக கொச்சி துறைமுகத்துடன் இந்திய கடற்படை ஒப்பந்தம் செய்துள்ளது

- இந்திராவதி அனை இந்திராவதி ஆற்றின் மீது கட்டப்பபட்டுள்ள ஓர் ஈர்ப்பு அணையாகும. இது ஒடிசாவில் உள்ளது.
- மத்திய அரசின் UDAN திட்டத்தின் கீழ் வேலூர் மாவட்டம் ஆம்பூர் அருகேயுள்ள அப்துல்லா புரத்தில் உள்நாட்டு வானூர்தி நிலையம் தொடங்க மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.